# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 33/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 12 |
| Name | : திரு. வடிவேல்முருகன் |
| Father/Husband's Name | : சீனி |
| Village | : காவல் ஆய்வாளர் |
| Taluk | : கும்மிடிபூண்டி வட்டம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.05.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது காவல் ஆய்வாளராக கும்மிடிபூண்டி வட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் செங்கல்பட்டு நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது குற்ற எண்.365/2022 இதச பிரிவுகள் 279, 304(ஏ) வின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்கினை எனக்கு முன்பிருந்த ஆய்வாளர் விசாரித்திருந்த வழக்கினை நான் எனது மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று எனக்கு முன்பிருந்த ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்த போது அவரிடம் கூறியவாறே என்னிடம் கூறியதால் நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. எனது விசாரணையில் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட அரசு பேருந்து TN 21 N 1658 என்பதை அரசு பேருந்து ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவன குறைவாகவும் வாகனம் ஓட்டிய விவரம் தெரிந்தது. பின்னர் 02.08.2022 அன்று நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து விசாரித்து பின்னர் இரு நபர் ஜாமினில் தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு

அனுப்பி வைத்தேன். 29.09.2022 அன்று இவ்வழக்கில் இறந்த நபருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர். அபிராமிசரண்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு பிரேத பரிசோதனை செய்த செங்கல்பட்டு அரசு மருத்துவமனையின் மருத்துவர் இராமசந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் எடுத்து சென்ற காவலர் நாகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி குற்றம் புரிந்திருந்ததால் அவர் மீது இதச பிரிவுகள் 279, 304(ஏ) வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையானோர் வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டவர்கள் என்று சொன்னால் சரிதான். சாட்சிகள் 5, 6 ஆகியோர்கள் சாலவாக்கம் மற்றும் மாமல்லபுரத்தில் வசிப்பவர்கள் என்று சொன்னால் சரிதான். புதிய பேருந்து நிலையத்தில் ஒரு போலிஸ் பூத் உள்ளது என்றாலும், அதில் போலிஸ் காண்ஸ்டபிள் இருப்பார்கள் என்றாலும் சரிதான். பிரேத விசாரண அறிக்கையில் காலம் 3 மற்றும் 4ல் இறந்த நபரை முதலிலும், இறுதியிலும் உயிருடன் கண்ட நபர் என்று ஆம்புலன்ஸ் டிரைவர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டிலும் இறந்த நபரை மருத்துவமனையில் அனுமதித்தவர் என்று ஆம்புலன்ஸ் டிரைவரை தான் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த ஆம்புலன்ஸ் டிரைவரை விசாரணை செய்தால் இறந்த நபரை எங்கிருந்து ஆம்புலன்சில் ஏற்றி வந்தார் என்று தெரிய வரும் என்று சொன்னால் சரியல்ல. அவர் விபத்து பதிவேட்டில் எந்த இடத்திலிருந்து ஏற்றிவந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கின் சாட்சிகள் யாராவது விபத்து நடந்த இடத்தினை யார் மூலம் தெரிந்து கொண்டோம் என்ற விவரத்தை கூறியுள்ளார்களா என்றால் இல்லை. அவ்வாறு இருக்கும் போது ஆம்புலன்ஸ் டிரைவர் தான் சம்பவயிடத்தில் இருந்து ஏற்றிவந்தவர் என்று சொன்னால் சரிதான். அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரியாத வாகனம் என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வாகனத்தில் இறந்த நபர் எந்த வாகனத்தால், எந்த இடத்தில் விபத்து ஏற்பட்டு இறந்தார் என்ற விவரம் தெரியாது

என்றாலும், அதனால்தான் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லையென்றாலும், நான் கூறுவது போல் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லையென்றாலும், ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.